கிளாம்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம்
அவர்களின்
செயல்முறைகள்
முன்னிலை திருமதி.K. சொக்கலிங்கம்

ந.க.எண். 02 /2023–24/ஊ நாள்: .01.2024

பொருள் : மனைபிரிவு அனுமதி – திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம் - கிளாம்பாக்கம் ஊராட்சி - சர்வே எண்கள் 211/34,35, 36,37-ல் - 3042 ச.மீ பரப்பளவு கொண்ட மனைப்பிரிவில் 42 மனைகளுக்கு அனுமதி அளித்து உத்தரவிடல் - சார்ந்து.

பார்வை : உதவி இயக்குநர் நகர ஊரமைப்பு, திருவள்ளூர் மண்டலம், எண் 43/397A இரண்டாம் தளம், அன்னை இந்திரா காந்தி சாலை, ராஜாஜிபுரம் பகுதி II, திருவள்ளூர்- 602 001. அவர்களின் ந.க.எண்.3305/2021/திவம2 நாள் 21.07.2022.

*****

உத்தரவு:

திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கிளாம்பாக்கம் ஊராட்சி சர்வே எண்கள் 211/34,35, 36,37-ல் - 3042 ச.மீ பரப்பளவு கொண்ட மனைபிரிவு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டு மனைபிரிவு வரைபடம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், திருவள்ளூர் அவர்களால் பரிசீலனை செய்யப்பட்டு அங்கீகார எண் ந.க.எண்.3305/2021/திவம2 நாள் 21.07.2022 மூலம் தொழில்நுட்ப ஒப்புதல் 42 மனைகளுக்கு உரிய தொகை மற்றும் உள்ளாட்சி நிதிக்கணக்கில் செலுத்தப்பட்டுள்ளதால் 42 மனைகளுக்கு ஒப்புதல் அளித்து பின்வரும் நிபந்தனைகளுடன் வரைபட அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்

1. 1994 ஊராட்சிகளின் சட்டம் மனைபிரிவு மற்றும் துணை விதிகளுக்கு உட்பட்டது.
2. மனைபிரிவுவரைப்படத்தில் உள்ளவாறு மனைகள் ஒதுக்கப்படவேண்டும். உள்கட்டமைப்பு மற்றும் வெளிகட்டமைப்பு ஏதும் மாற்றம் செய்யக்கூடாது.
3. மனைபிரிவு வரைபடத்தில் உள்ளவாறு மனைபிரிவுகள் மற்றும் உட்பிரிவுகள் அமைப்பு இருக்க வேண்டும்
4. இவ்வாணையினை திருத்தம் செய்யவோ அல்லது நீக்கம் செய்யவோ தனிஅலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
5. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கிகரிக்கப்பட்டு மவ/நஊஉ_இ(திவம) எண் 206/2023 என எண்ணிடப்பட்ட வரைப்படத்தின்படி எல்லைக்கற்கள் வரையருக்கப்பட வேண்டும். மனைபிரிவுக்குள் வரும் தெருக்கள் அனைத்தும் ஊராட்சி கட்டிட விதிகள் 3(5)ன்படி ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளுக்கேற்ப சரளைகற்களை கொண்டு மனுதாரர் நிர்வாக அதிகாரிகளால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும், அகலத்திற்கும் அமைக்கப்பட வேண்டும்.
6. தேவையான பாலங்கள் சாக்கடை வடிகால், துப்பரவு வசதி, தெருவிளக்கு ஆகிய வசதிகள் நிர்வாக அதிகாரியின் கருத்திற்கேற்ப மனுதாரர் அமைத்து தரவேண்டும்.
7. இருசாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளில் மூலைகளில் அங்கிகரிக்கப்பட்ட வரைப்படத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (splay) அமைக்கப்பட வேண்டும்.
8. மனைபிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெருமட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.
9. மனைபிரிவில் அமையும் மனையில் கட்டிடங்கள் கட்டுவதற்கு முன் ஒவ்வொருகட்டிடத்திற்கும் உள்ளாட்சியிடமிருந்து அனுமதி பெறவேண்டும்.
10. தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைபிரிவு வரைபடத்தினை பொதுமக்கள் பார்வைக்கு சம்மந்தப்பட்ட இடத்தில் 6 அடி X 4 அடி என்ற அளவுக்கு குறையாமல் கான்கிரீட் பலகையில் வரைந்து வைக்கப்பட வேண்டும்.

11. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைபிரிவு மனைகள் வாங்கும் ஒவ்வொரு மனுதாரருக்கும் மனைபிரிவு வரைப்படம் நகல் வழங்கப்பட வேண்டும்.
12. மனைபிரிவு மனைகள் வாங்க விரும்பும் எந்த நபரும் விண்ணப்பதாருக்கு சொத்தின் மீதுள்ள உரிமையை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.
13. மனைபிரிவு இடம் 1984ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துதல் சட்டபிரிவு 4(1)ன்படி நில உச்சவரம்பு சட்டம் 1978 மற்றும் நில சீர்திருத்தச் சட்டம் 1961 தொடர்பான விதிமுறைகள் ஏதேனும் மீறப்பட்டிருந்தால் மனைபிரிவு அனுமதி இரத்து செய்யப்படும்.
14. மனைபிரிவு விதிமுறைகளின்படி கட்டணத்தொகை குறைவாக செலுத்தப்பட்டுள்ளதாக கண்டறியப்பட்டால் பிற்காலத்தில் அத்தொகையினை மனுதாரரால் செலுத்தப்படவேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.
15. மேற்படி நகர்ஊரமைப்பு துறை இயக்குநர் அனுமதி கடிதத்தின்படி தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள 42 மனைகளுக்கு அனுமதி அளித்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

தலைவர் / நிர்வாக அலுவலர்
78 ஊராட்சிமன்றத் தலைவர்/ கி
திளாம்பாக்கம் ஊராட்சி
திருவள்ளூர் மாவட்டம்.

இணைப்பு: வரைபடம்-
D.P. No: 71274/09.2.2024
Rs. 25857/- only.

பெறுநர்
Thiru.K.Amarnath Reddy,
Madhura Nagar, Nellore,
Andhrapradesh – 524002.

ஊராட்சி படிவம் எண் : 6

பலவகை வரவு ரசீது

கிளாம்பாக்கம் ஊராட்சி
தேதி 28925
திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம்

பற்றக எண் : D.P. No: 71274/09.02.2024 ரசீது எண் 14/02/

Kilambakkam ஊராட்சி

நாள் 21/3f

திரு K. Amarnath Reddy கிராமம் Kilambakkam என்பவரிடமிருந்து

ரூபாய் 25857 (ரூபாய் Twenty five thousand five hundred and seventy) only மட்டும்

Property Tax 5/2023-2024 வகைக்காக வெற்றுக்கொள்ளப்பட்டது.

பணம் செலுத்துவரின் கையொப்பம் வரி வசூலிப்பவர்

K. தொகுதிலிங்கம்
தலைவர்
78, கிளாம்பாக்கம் ஊராட்சி மன்றம்
திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம்

குறிப்பு :
1. இந்த ரசீது RTGS தலைவரின் Facsimile-யும் மற்றும் வரி வசூலிப்பவரின் கையொப்பமும் இருந்தால் தான் செல்லுபடியாகும்
2. பணம் செலுத்துவரின் கையொப்பம் தவறாது பெறப்பட வேண்டும். இது வருவாய் ஈட்டக் கூடிய வரி மற்றும் வரியல்லாத அனைத்து வகை வரி இனத்திற்கும் பொருந்தும்